

அளவர்/ உதவிவரைவாளர்	
வரைவாளர் நிலை-III	
மேற்பார்வையாளர்	

இம்மனைப்பிரிவின் வரைபடத்திற்கு ஊராட்சியின் தீர்மானம் எண் : 297/2023 நாள் : 29.09.2023-ல் இறுதி ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

Document certified by R.Rani.
Signed by: Assistant Director
Location:Erode
Date:2023.0[illegible] 12:12:58

தலைவர் / நிர்வாக அதிகாரி
புதுப்பீர்கடவு ஊராட்சி

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் (DTCP), ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியம்

புதுப்பீர்க்கடவு ஊராட்சி

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், புதுப்பீர்கடவு ஊராட்சி மற்றும் கிராமம் ரீ.ச.எண்: **462/2B,8B** -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுடப ஒபபுதல் அமைப்பு வரைபடம் (திட்டமில்லா பகுதி)

அளவு:-1:33'0"(அ) 1:400

இணையவழி விண்ணப்ப எண்:0MI5Q9LF நாள்:-10-06-2023

<u>குறிப்பு:-</u>

வ

மனைப்பிரிவின் பரப்பு	: 2.38 ஏக்கர் (அ) 9632.0 ச.மீ
கோரிய மனைகள்	: 39
ஒதுக்கிய மனைகள்	: 39
மனைப்பிரிவு எல்லை	
நிலையில் உள்ள சாலை	
ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு	: (மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு)x10% : (9632.0 - 2746.96)x10% = 688.50 ச.மீ

(பூங்கா ஒதுக்கீடுற்கு ஈடான அரசு வழிகாட்டு மதிப்பு தொகை மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது)

<u>பொது ஒதுக்கீடு:-</u>

<u>உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:-[தான ஆவண எண்:4669/2023 நாள்:27-06-2023]</u>

மனைப்பிரிவின் சாலை பரப்பு : 2746.96 ச.மீ

பொது உபயோகம்பரப்புதேவை : (9632.0 - 2746.96)x0.5% =34.42ச.மீ

பொது உபயோகம்(A) : 40.74 ச.மீ (0.59%)

<u>தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்காக உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:-[தான ஆவண எண்:4668/2023 நாள்:27-06-2023]</u>

பொது உபயோகம்(B) : 35.34 ச.மீ (0.51%)

<u>கட்டிட வரம்பு</u> :- 9.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50மீ விடப்படல் வேண்டும்.
9.0மீ க்கு மேல் 18.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0மீ விடப்படல் வேண்டும்.

<u>மூலை முடக்கு:-</u> 12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5x1.5மீ விடப்படல் வேண்டும்.
12.0மீ முதல் 30.5மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 4.5x4.5மீ விடப்படல் வேண்டும்.

<u>நிபந்தனைகள்:-</u>

1. அரசாணை எண்-18 ந.நி மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019 (ம) அரசாணை எண்-16 ந.நி மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 31.01.2020, அரசாணை எண்-181, வீட்டுவசதி (ம) நகர்புற வளர்ச்சித்துறை நாள்-09.12.2020-ன் படி சாலை மற்றும் 0.5% பூமி உள்ளாட்சிக்கும், 0.5% பூமி உள்ளாட்சி அல்லது TANGEDCO க்கும் -தானமாக பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. அரசாணை எண்:181, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்-09.12.2020-ல் தெரிவுத்துள்ளவாறு சாலைகள், மழைநீர் வடிகால் வசதி, மேல்நிலை நீர்தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் மற்றும் தெருவிளக்குகள் ஆகியவை உள்ளாட்சியின் விருப்பத்திற்க்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
3. அரசாணை எண்:141 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்-16-07-22-ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்
4. இம்மனைப்பிரிவிற்கு ஊராட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தில் எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும்,எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்படவில்லை என்றும், புதுப்பீர்கடவு ஊராட்சி தலைவர் அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
5. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைபிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன் அறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
6. விற்பனைக்கு உண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்பு துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்படவேண்டும்.
7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றம் /விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'x4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
8. உத்தேச மனைப்பிரிவு சாலைகளக்கு மனுதாரரால் தார் சாலை அமைக்கப்பட்டு (BDO/UE) செயல் அலுவலர் / யூனியன் பொறியாளர்/நகராட்சி பொறியாளர் அவர்களிடம் தரம் குறித்து தகுதிச் சான்று பெறப்பட்ட பின்னர் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்
9. பிரஸ்தாப மனைப்பிரிவுக்கு இவ்வலுவலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் மட்டுமே வழங்கப்படுகிறது. மனுதாரின் நில உரிமத்தினை உறுதி செய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்
10. பிரஸ்தாப மனைப்பிரிவு அமையும் இடம் நீதிமன்ற வழக்கு ஏதும் நிலுவையில; உள்ளது என அறியப்படின் இவ்வுத்தரவு செல்லத்தக்கதல்ல
11. மனைப்பிரிவினை சுற்றி சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டிருப்பின் அதனை அகற்றி அருகிலிருக்கும் இடத்திற்கு இணைப்பு பாதை அமையும் வகையில் சுற்றுச்சுவர் இடித்து அப்புறப்படுத்தப்பட வேண்டும்

SWP/DTCP/ERODE/LAYOUT APPROVAL NO: 294 /2023

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,(பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
ஈரோடு மாவட்டம்